அருளோசை

திருவள்ளுவ
ஆண்டு 2006
வைகாசி
1975 மே

சமய பாட போதனைத் திங்களிதழ்



திருஞானசம்பந்தர்

உ

ஞானத்தின் திருவுருவை
நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி
மண்ணில் வளர்மதிக் கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றை
செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக்
கண்களிப்பக் கண்டார்கள்.

—சேக்கிழார்.

தமிழ்நாடு தெய்விகப் பேரவை

9, மகாராஜா சூரியராவ் சாலை,
சென்னை-600018

ஆண்டுச் சந்தா ரூ.5]
[தொலைபேசி : 768

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

பழனி ஞானதண்டாயுதபாணியைப் பணிந்திட வாரீர் !
அழகான திருமுருகன் அருள் பெறவே திரண்டு வாரீர் !
செந்தேனும் பாலும் மணக்கும் சேயோனை வழிபட வாரீர் !
சந்தன விபூதி மணக்கும் திருமேனி கண்டு மகிழ வாரீர் !

முடிக்காணிக்கை தரத் தனியிடம் !
தங்குவதற்கேற்ற வசதிகள் !
முதியவரும் முடியாதோரும் முருகன் அருகே செல்ல
இழுவை ரயில் வசதி !
பொங்கிபொழும் பேரழகனைத் தாங்கிவரும் தங்கரதம்
காண வசதிகள் !

அத்தனையும் செய்து அழைக்கிறது பழனித் திருக்கோயில். தமிழ்க்கடவுளாம் கந்தப்பெருமானின் அருள்பெற்று, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் கண்காணிப்பில் கீழே கண்ட நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

1. அருள்மிகு பழனியாண்டவர் கலைக்கல்லூரி
2. அருள்மிகு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி
3. அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி
4. அருள்மிகு பழனியாண்டவர் செந்தமிழ்க் கல்லூரி
5. கார்த்திக்பள்ளி (ஆங்கிலப்போதனை)
6. செவிடர்பள்ளி
7. நாதசுரக் கல்லூரி
8. வேத ஆகமப்பாடசாலை
9. அன்புஇல்லம் (அனாதை விடுதி)
10. முதியோர் இல்லம்
11. குழந்தைகள் காப்பகம்
12. மருத்துவமனை

பழனித் திருமலையில் நாளும் பெருகிவரும் பக்தர்கட்குப் போதிய வசதிகள் செய்து தருவதற்காக 60 லட்சரூபாய் செலவில் மாபெரும் திருப்பணித் திட்டம் செயல்பட உள்ளது.

ஆர். அர்ச்சுனன், பி.ஏ.,
துணை ஆணையர்-நிர்வாக அதிகாரி

அருளோசை

சமய பாட போதனைத் திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மணி 3	இராக்கத வைகாசி 1975 மே	ஓசை 11

அருளோசை அன்பர்களுக்கு, வணக்கம்.

பேரவையின் மூன்ருவது மாநில மாநாடு, இத்திங்கள் 9, 10, 11 தேதிகளில் நாகர்கோயிலில் நடைபெற்றது. எழுச்சிமிகு நிகழ்ச்சிகள் நிறைந்து சிறப்புற நடைபெற்ற மாநாட்டுப் பணிகளில் ஈடுபட்டிருந் தமையால் அருளேசை இதழ் வெளியீட்டில் தாமதமேற்பட்டுவிட்டது குறித்து வருத்தந் தெரிவித்துக் கொள்கிருேம், மாநாடு பற்றிய விரிவான செய்திகளும் படங்களும் அடுத்த இதழில் இடம் பெறும்.

நமது அருளேசை இதழ் வெளியிடப்படுவதன் நோக்கமே சமய போதனை தான் என்பது தாங்கள் அறிந்ததே. இந்நோக்கம் நிறைவேறு மாற்ருன் ஒவ்வொரு அருளோசை வாசகரும் வினுவிடைப் பகுதியில் விடைகள் எழுதுவதை விரும்புகிருேம். இதழின் கட்டுரைகள் அனைத்தை யும் கூர்ந்து படித்து, வினுவிற்கான விடைகளைக் குறிப்பிட்ட நேரத்தில் எழுதி அனுப்பினுல் சிறப்பாக இருக்கும். பரிசு பெற்றவர் பெயர்களை அடுத்த இதழில் அறிவித்து வழக்கம்போல் பரிசுகள் வழங்கப்படும். மிகுந்த எண்ணிக்கையில் வாசகர்கள் இதில் பங்கேற்கும்படிக் கேட்டுக் கொள்கின்ருேம்.

வைகாசித்திங்கள் மூலநட்சத்திரத்தன்று சம்பந்தர் முதலான நான்கு நாயன்மார்களின் விழாவும் சேக்கிழார், கழற்சிங்கர், நமிநந்தியடிகள், சோமாசிமாறர், நம்பியாண்டார்நம்பிகள், ஆகியோர் திருநட்சத்திரங் களும் வருகின்றன. அன்பர்கள் அந்நாளைச் சிறப்பாகக் கொண்டாடும் படி கேட்டுக் கொள்கின்ருேம்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

இந்த இதழில்

"அருளோசை"

வினா விடைப் பகுதி-மார்ச்-75

பரிசு பெற்றவர்கள்

முதல் பரிசு : திரு. சி. சண்முகானந்தம், கோபாலசமுத்திரம், திருநெல்வேலி, சந்தா எண் 2933

இரண்டாம் பரிசு : திரு. டி. சி. சாமிநாதன், ஆறகழூர், 636101 ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம், சந்தா எண். 3150

மூன்றும் பரிசு : திரு. மீ. சீனிவாசன், திருவாடானை, 623407 இராமநாதபுரம், சந்தா எண் 1837

நான்காம் பரிசு : திரு. வே. அரங்கசாமி, அதிகாரப்பட்டி, தர்மபுரி மாவட்டம், சந்தா எண் 2725

மூன்று என்ற சிறப்புடையவை

எவை ?

நீங்கள் பதில் கூற நினைந்தவை

இருக்கின்றனவா என்பதற்கு

319 ஆம்பக்கம் பார்க்க

உ

சிவமயம்

மழைவேண்டும் விழைவு

காஞ்சி "சிவம்"

சென்னைக் கடற்கரையிலே 23-3-75 மாலையிலே மக்கள் வெள்ளம் பெருகிற்று. அலையெதிரே தலை ஆயிரம் ஆயிரமாகத் தெரிந்த தோற்றம் எல்லாருடைய காட்சிக்கும் அளவில்லா வியப்பும் நயப்பும் ஆக்கின. உலகில் நல்வினைக்கு வாழ்வும் இல்லை. தீவினைக்குக் காலமோ இடமோ குறைவற உதவுகின்ற தீதுக்கு இணை யாது? குழந்தை முதல் கிழவன் முடிவாக உள்ள எல்லாரும் எல்லாத் தீவினைக்கும் தப்பி வாழ இயலாத பெருங்கொடுமை முற்றப் பெருகிய இக்காலத்தில் இலட்சக் கணக்கில் மக்கள் கூடும் நிலையும் உண்டோ? இதற்குக் காரணம் ஆராய்தல் வேண்டும்.

விசும்பிற் றுளிவீழின் அல்லாமல்மற் றாங்கே
பசும்புற் றலை (யும்) காண் பரிது.

புல் இன்றேனும் புல்லும் வினை ஒல்லும் வகையால் மட்டும் அன்றி ஒல்லாவகையெல்லாவற்றினும் வல்லாங்கு நடக்கின்றது. பல பொருளினும் படக்காட்சி மிகுதலால் அதற்குக் குறைவில்லை. ஈசுவர கடாட்சத்தால், பிரசோற்பத்தி பெருகி இந்த ராட்சத விருத்தியை ஆக்கிற்று. மக்கள் மாக்களாகிப் புண்ணியத்தை மறந்து போனார்கள். பாவத்தின் எல்லையைக் கிட்டி விட்டார்கள். விடவே குடிக்க நீரும் இல்லை. வடிக்கச் சோறும் இல்லை. ஆக்க அரிசியும் இல்லை. தேக்கச் செல்வமும் இல்லை. ஒன்றுக்கு மூன்று என்றது பொய்த்தது. ஆறுக்கு ஒன்று என்பது மெய்த்தது. "நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தது நீரினும் ஆரளவின்று" என்று காதலைப் பாடினர். அதையே கடவுள் திறத்தில் வைத்து ஓங்கி ஆழ்ந்து அகன்றும் நுண்ணிய பொருளாகப் போற்றினர். ஒப்பிலார் ஒருவர். அத்தகு வறுமையை உலகம் எய்துகின்றது. அது பாவ நாடிகளது ஜீவ நாடியைப் பிடித்துக் கொண்டது. மழையில்லை என்று வருந்தவில்லை. மழைத்துளியும் இல்லையே வருந்தும் காலம்.

புண்ணியம் மேலே உயர்த்தும்; பாவம் கீழே தாழ்த்தும். வழிபாடும் கற்பும் ஒழிந்தன. அவற்றின் விளைவாகிய மழையும் பெய்யா தொழிந்தது. வேண்டாத இடத்திலே பெய்து கெடுக்கின்றது. மிகுபெயலும்

(அதிவிருஷ்டியும்) பெயலின்மையும் (அநாவிருஷ்டியும்) கூடாதன. அளவாகப் பெய்தலே நல்லது. பாவம் தீராமல், புண்ணியத்தின் விளைவு கிட்டாது. நாடோறும் செய்யும் பாவத்திற்கு எல்லையே இல்லை. கடற்கரையில் மக்கள் வெள்ளம் முழுதும் பாவமே செய்ததன்று. புண்ணியமே செய்ததும் அன்று; புண்ணிய பாவம் இரண்டும் செய்ததன் வெள்ளம்தான் அது.

மழைக்குப் பேரவாக் கொண்டு கடலுக்குப்போய்க் கூடிப் பாங்கும் பண்பும் சான்ற வழிபாட்டைச் செய்தோம். சீலத்திரு. அடிகளார் அவர்கள் முயற்சி மிகப் பெரிது. அப்பெருமையைக் கடற்கரைக் கூட்டம் தெரிவித்தது என்று கொள்வதினும், அம்மக்கள் எல்லாரும் மூச்சும் விடாது பேச்சும் கொடாது நேரம் ஆச்சு என்றும் கருதாது அமைதியாயிருந்ததே சொல்லிற்று எனல் முற்றும் உண்மை. வாரத்திதழ் (குமுதம்) மழை வேண்டல் செய்தும் மழை பெய்ய வில்லையே என்று பிறர் கேட்டதற்கு விடையாகச் சொன்னதை நினைத்தல் வேண்டும்.

நோய் மிக்கார்க்கு அந்நோய் தீர்ந்தால் அன்றி வன்மை நன்மை முதலிய யாவும் உளவாகா. பாவம் மிக்கவர்க்கு அப்பாவம் தீர்ந்தால் அன்றிப் புண்ணியத்தின் விளைவு உளதாகாது.

மழை வேண்டின் அதற்கு ஏதுவான நற்செயலை மேற்கொள்ளல் வேண்டும்.

வான் முகில் வழாது பெய்ய வேண்டும். பெய்தால் மலிவளம் சுரக்கும்; அச்சுரப்பால் மன்னன் கோல் முறை அரசு செய்வான். அரசு நீதி வழுவாத நெறி முறையை மேற் கொண்டால் தான் உயிர்கள் குறைவில்லாமல் வாழும். அவ்வாழ்வு வளரவும் தாழ்வு உண்டாகாமல் ஒழியவும், நான்மறைகளும் அவை கூறும் அறங்களும் ஓங்க வேண்டும். நல்ல தவங்கள் பெருக வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணமாகிய வேள்விகள் மேன்மேலும் எவ்வூரிலும் எந்நகரிலும் எக்கோயிலிலும் வீட்டிலும் செய்துவரவேண்டும். இந்நிலையை உணரவும் உணர்த்தவும் சமயங்கள் போதிக்கப் படல் வேண்டும். பலமொழியிலும் இலக்கியங்களில் இவற்றை அரசு செய்து வந்து தன் நாட்டில் என்றும் வறுமை தோன்ருமல் காத்ததாகக் கூறுவதை அறிகின்ரேம். 'வேள்வி நற்பயன் வீழ் புனல்'. பண்டைய மன்னர் எல்லாரும் நாடு செழிக்க உயிர்கள் குறைவின்றி வாழ வேள்விகளைச் செய்தனர். வேத பாடசாலைகளையும் தமிழ் மறைப் பாடசாலைகளையும் ஐம்பதாண்டிற்கு முன் இருந்த வண்ணமேனும் நடாத்த நம் கருணாநிதி யாட்சி திரும்புமானல், அவர் போல எவரும் நாடாளவில்லை என்னும் அழியாப் புகழ் சரித்திரப் பிரசித்தியுடையதாகும். வேறு எதுவும் ஆட்சிக்கு மாட்சி தோற்ருது. வாழ்க அந்தணர் வானவர் ஆனினம். வீழ்கதண்புனல். ஆழ்கதீயது. உயிர் எல்லாம் திருப்பெயரே சூழ்க. வையகம் துயர் தீர்க!

"சக்தி லிங்கம்"

ஏ. ஏகாம்பரநாதன், எம். ஏ.,
தொல் பொருளாய்வுத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்

தமிழக வரலாற்றில் முக்கிய இடம் பெறும் நகரங்களில் பல்லவர்களது தலைநகராக விளங்கிய காஞ்சிமாநகரம் மிகச் சிறப்புடையதாகும். இந்நகர் கல்வி, சமயம், கலை முதலியவற்றால் இன்றும் சிறப்புற்று விளங்குகிறது காஞ்சியின் வடபகுதியில், காமாட்சி அம்மன் கோயிலின் மேற்புறம் ஆதிபீட பரமேசுவரி ஆலயம் ஒன்றுள்ளது. இக்கோயிலில்தான் ஆதிசங்கரர் முதலில் காமகோடி பீடம் அமைத்ததாகவும், பின்னர் அது காமாட்சியம்மன் கோயிலுக்கு மாற்றப்பட்டதாகவும் செவிவழிச் செய்தி நிலவி வருகின்றது. இக்கோயிலின் மண்டபத்தில் தமிழகத்தின் வேறெந்தப் பகுதியிலும் காணப்பெறாத தனிச் சிறப்புடைய சக்தி லிங்கம் ஒன்றுள்ளது.

இலிங்கம் :

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலுள்ள இந்து சமயக் கோயில்களில் காணப்படும் இலிங்கங்கள் பொதுவாக பிரம்மபாகம், விஷ்ணுபாகம், உருத்திரபாகம் என்ற மூன்று பகுதிகளைக் கொண்டதாக விளங்கும். சில லிங்கங்களில் உருத்திரபாகம் தனியாகத் தூண்போன்று காணப்படும். இன்னும் சில லிங்கங்கள் மூன்று, நான்கு, ஐந்து தலைகளுடன் கூடிய முகலிங்கங்களாக உள்ளன. ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த குடிமல்லம் என்னுமிடத்திலுள்ள லிங்கத்தின் உருத்திர பாகத்தில் இரு கைகளையுடைய சிவன் முயலகன் மீது நிற்கும் நிலையிலுள்ளான். ஆனால் தமிழகத்தில் சிவனது அருபவடிவாகிய லிங்கத்தில் உருவங்களையோ, தலைகளையோ அமைத்து வழிபடும் வழக்கம் அதிகமாக இல்லை.

காஞ்சி நகரில் ஆதிபீட பரமேசுவரி ஆலயத்திலுள்ள லிங்கம் 40 செ.மீ. உயரமுடையது. இதன் உருத்திர பாகத்தில் சக்தியின் வடிவம் அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. இறைவியின் வடிவம் லிங்கத்தில் காணப்படுவதால் இது 'சக்தி லிங்கம்' என அழைக்கப்பெறுகிறது. அமர்ந்த நிலையிலுள்ள அன்னை நாற்கரமுடையவளாக மேற்புற வலதுகையில் அங்குசமும், இடது கையில் சூலமும், கீழ்ப்புற வலது கையில் வாளினையும், இடது கையில் கபாலத்தினையும் கொண்டுள்ளாள். இறைவியின் வலது கால் தொங்கிய நிலையிலும், இடது கால் மடங்கிய நிலையிலும் கூடிய அர்த்தபரியங்க நிலையிலுள்ளது. தலையில் மகுடமும் காதுகளில் குண்டலங்களும் காணப்படுகின்றன.



இத்தகைய தனித்தன்மை வாய்ந்த அரிய கலைச்செல்வம் எந்த மன்னராட்சியில் நிறுவப்பட்டதென்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை. எனினும் அதன் கலைப்பாணியைக் கொண்டு இச் சக்தி இலிங்கம் விசயநகர மன்னர்கள் காலத்தில் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று கூறலாம்.

டாக்கா கலைக்கூடச் சிற்பம் :

காஞ்சியிலுள்ள சக்தி லிங்கத்தினின்றும் சிறிது வேறுபட்ட அரிய புடைப்பியல் சிற்பம் (Relief sculpture) ஒன்று டாக்கா தொல்பொருள் கலைக்கூடத்திலுள்ளது. இச்சிற்பத்தின் மேற்பகுதியில் சக்தியின் வடிவம் அரையளவு மட்டும் உடையதாய் லிங்கத்துடன் புணர்ந்த நிலையில் காணப்படுகிறது. நாற்கரங்களுடைய இறைவியின் மேற்புறக் கைகளில் உருத்திராக்கமும், ஏட்டுச் சுவடிகளும் உள்ளன. கீழ்ப்புறக் கைகள் தியான முத்திரையைக் குறிப்பதாக விளங்குகின்றன. (J. N. Banerjea Development of Hindu Iconography PP. 508-509) இப்புடைப்பியல் சிற்பம் சக்தியின் வடிவங்களில் ஒன்ருகிய மகாமாயை என்று பட்டாசாலை அவர்கள் குறிப்பிட்டுள்ளார். ஆனல் கல்கி புராணத்தில் அக்கமாலையையும், ஏட்டுச் சுவடியையும் கைகளில் கொண்டு விளங்குபவள் திரிபுரபைரவி என்று காணப்படுகிறது. எனவே இச்சிற்பம் மகாமாயை அல்ல என்று பானர்ஜீ கூறுகிருர். எவ்வாருயினும் லிங்கத்தில் சக்தியின் வடிவம் காணப்படும் சிற்பங்கள் மேற்கூறிய இரண்டினைத் தவிர வேறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. காஞ்சியிலுள்ள சக்திலிங்கம் புடைப்பியல் சிற்பமல்லாது தனிச் சிற்பமாகத் (Sculpture in the round) தனித் தன்மை பெற்று விளங்குகிறது.

தத்துவ விளக்கம் :

இறைவனும் இறைவியும் இணைந்த நிலையே உலகின் தோற்றம். அண்டங்களனைத்தும் சிவ சக்தி மயமாயிருக்கின்றன. சிவம் என்பது சேதனம், அறிவுப் பொருள். சக்தி என்பது அசேதனம், ஜடப்பொருளாகும். இவையிரண்டும் இணைபிரியாது உலகெங்கும் இலங்குகின்றன. உயிரினங்களை எடுத்துக் கொண்டால் ஒரு பகுதி ஆணும், இன்னெரு பகுதி பெண்ணுமாய் விளங்குகிறது. ஆணும் பெண்ணும் சேர்தலாலே புதிய உயிரினங்கள் தோன்றுகின்றன. இதற்கு மூலமாக விளங்குவதே சிவசக்தியாகும். சிவனின்றேல் சக்தியில்லை, சக்தியின்றேல் சிவனில்லை. அவை என்றும் இணை பிரியாதன. எனவே சக்தியும் சிவனும் ஒன்று என்பது தெளிவாகும். இதனை,

"சக்தி சிவமாம் இலிங்கமே தாபரஞ்
சக்தி சிவமாம் இலிங்கமே சங்கமஞ்
சக்தி சிவமாம் இலிங்கஞ் சதாசிவஞ்
சக்தி சிவமாகுந் தாபரந் தானே"

எனத் திருமந்திரம் இனிது கூறும்.

(திருமந்திரம். பா. 1725.)

"வன்தொண்டன் என்பதோர் வாழ்வு"

டாக்டர் வித்துவான் வை. இரத்தினசபாபதி, எம்.ஏ., பி.ஓ.எல்., பிஎச் டி.,

தம்பிரான் தோழரான நிகழ்ச்சியில் அமைந்த சிறப்பு

'கு' நான்காம் வேற்றுமைக்குரிய உருபு. 'ஏற்றுக் கொள்ளுதல்' என்பது அதன் பொருள். 'புத்தகத்தை இராமனுக்குக் கொடுத்தான்' என்ருல் இராமன் ஏற்றுக் கொள்ளும் பொருள், என்பது வெளிப்படை. ஏற்றுக் கொள்பவன் யாரேயாயினும் தாழ்ந்தவன் தானே! ஏற்றுக் கொள்ளும் கையானது தாழ்ந்து நிற்பது தானே! 'கு' என்ற நான்காம் வேற்றுமை உருபின் பொருளை இந்த அளவுக்கு நீட்டுகிருர் கம்பர்.

"உங்கள் குலத் தனிநாதற்கு உயிர்த்துணைவன்"

என்று சுமந்திரன் கூற, "'கு' என்ற உருபு தனிநாதன் மேல் இடப் பட்டிருத்தலின், குகனை உயிர்த் துணைவனுக முந்திச் சென்று ஏற்றுக் கொண்டவன் இராமனே" என்று பரதன் எண்ணினவனுய், "மன் முன்னே தழீஇக் கொண்ட மனக்கினிய துணைவன்" என விரிவுரை காட்டினுன்.

இத்தகைய அமைப்பை நாம் சேக்கிழார் வாக்கில் காண முடியவில்லை. "தோழமை ஆக உனக்கு நம்மைத் தந்தனம்" என அவ்வாக்கு அமைகிறது. ஒருவேளை அத்தகைய அமைப்பில் கல்வெட்டுத் தொடர், செய்தி வாக்கியங்கள் இருந்திருக்கலாம். அத்தகைய வரலாற்று வாக்கியங்களை மாற்ற முடியாத நிலைமை-சிக்கல் சேக்கிழாரடிகளுக்கு நேர்ந்திருக்கலாம்.

ஆயினும் "அன்று முதல் அடியார்களெல்லாம் "தம்பிரான் தோழர்" என்றே அறைந்தார்" என்று சேக்கிழார் அமைத்துக் கொடுக்கத் தவற வில்லை. "தம்பிரான் தோழர்" என்ற தொடருக்குத் "தம்பிரானுக்குத் தோழர்" என்பதைத் தவிர வேறு பொருள் அமைக்க முடியாது.

திருமணத்தைத் தடுத்து, "உன் பாட்டனுர் ஒரு ஓலை எழுதிக் கொடுத்திருக்கிருர். அவ்வோலைப்படி, நீயும் உன் மரபுளோரும் எனக்கு அடிமை" என்று கூறி உறுதிப்பாடு செய்த அவ்விறைவனே இன்று சுந்தரருக்கு, தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் இணைத்துத் தோழமைச் சீட்டு எழுதிக் கொடுக்கிருன். சுந்தரரை ஆவணங் காட்டி ஆட்கொண்டது வலிய ஆட்கொள்ளுதல் என்பதாக அமையுமானுல் தோழமை நிகழ்ச்சியும் சுந்தரருக்கு வலியக் கொடுத்தல் என்பதாக அமையும்.

சுந்தரர் கேட்காமலேயே அவருக்கு இறைவன் வலியச் சென்று கொடுத்தவை இரண்டு. (1) சித்தவடமடத்தில் சுந்தரர் முடிமேல் தம் திருவடிகளைச் சூட்டினர். சுந்தரர் அதை அறிந்து கொள்ளவில்லை.

தம்மான் தன் அடிக்கொண்டு என் முடிமேல் வைத்திடும் என்னும்
 ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை எறிகெடில வட வீரட்டானத்து உறைவானை
 இறைபோதும் இகழ்வன் போலியானே

எப்போதும் அவனையே எண்ணிக் கொண்டிருக்கும் நான் அந்த ஒரு நொடிப்பொழுது மறந்திருந்திருப்பேன் போலும். அதனால் விளைந்த தவறு இது என வருந்துகிறார். 'என்முடிமேல் வைத்திடும் என்னும் ஆசையால் வாழ்கின்றேன்' என்று தன் ஆர்வத்தை வெளிப்படுத்திய பிறகுங்கூட, அவ்வாய்ப்பை இறைவன் மீள அளிக்கவில்லை.

(2) தோழமையாக இறைவன் தம்மைத் தந்தது. சுந்தரரால் எண்ணிப் பார்க்கவும் முடியாத ஒன்றை, எதிர்பாராத வகையில் தருகின்றான்.

'சிவம்' எனும் செம்பொருள் கடந்த நிலை, கலந்தநிலை என்ற இரு நிலைகளிலும் உள்ள பல்வேறு குணங்களையும் 'தோழமை' என்ற ஒரு குணத்தில் அடக்கிக் கொள்கிறது. எல்லாவற்றையும் விட்டுவிட்டு என் திருவடியில் அடைக்கலம் புகுந்தால் உன்னை முழுமையாக ஏற்றுக் கொள்றேன் என்ற அடைக்கல நிலை-சரணாகதித்துவம் பேசி வளர்க்கப் பெறும் இந்நாட்டில், ஒரு அடியவனிடத்தில் ஆளும் பண்பை உடையவன் என்ற முறையில் அன்று, ஒரு மனைவியிடத்தில் கணவன் என்ற முறையில் அன்று, மற்று இம்மானிட மனத்தால் எந்த ஒரு உறவு பற்றியும் சிந்திக்க முடியாத தோழமை முறையில், தானே வலியவந்து, தன்னைத் தன் அடியவனுக்கு முழுமையாக ஒப்படைத்து விடுகிறது, இத்தகையதொரு கடவுள் தன்மையை-தத்துவத்தை வேறு எங்கே காணமுடியும்!

கேளாமல் பெற்றது; வேறு யாருக்கும் கிடைக்கப் பெறாதது; வலிய வந்து கொடுக்கப்பெற்றது; முழுமையாகக் கொடுக்கப் பெற்றது; சொல்லால் சொன்னது மட்டில் அன்று, செயல்முறைத் திட்டத்திலும் ஏவலிடக் கூடாத காரியத்துக்காக ஏவலிடப்பெற்று, அதன் மூலம் சரி என ஒப்புக் கொள்ளப்பெறும் முறையில் பரிசீலிக்கப்பெற்றது. இத்தகு நிலைகளைக் கொண்டதே சுந்தரருக்குக் கிடைத்த தோழமை முறை.

தோழமை பெறற்குக் காரணம் :

சைவசித்தாந்தத் தத்துவ உலகில் காணப்பெறும் மரபு ஒன்று உண்டு. சற்புத்ரமார்க்கம், தாசமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்ற நான்கு வழிகளில் சகமார்க்கம் தோழமைநெறி என்றும் அந்நெறியில் நின்ற ஆசாரியர் சுந்தரர் என்றும் கூறப்பெறுகின்றன. நால்வகை நெறிகளுக்கும் கூறப்பெறும் பயன்கள் முறையே சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்பன. இவ்வமைப்பில் நின்று சகமார்க்கம், சாரூபம் என்பவைகளுக்குக் கொடுக்கப்பெறும் விளக்கங்களையும் இணைத்துக் கண்டு, அவைகளோடு சுந்தரர் தம் வாழ்வை ஒப்பிட்டால் சிக்கல்கள் பல தோன்றும். அவைகளை விரித்தால் இது தத்துவக் கட்டுரையாக மாற்றம் பெற்றுவிடும்.

சிந்தனைக்கு எளிமையாக அமையும் ஒரு வழியில் இதற்கு விடை காணலாம். தந்தை மகன் என்ற நெறியில் நிற்பவர் அவ்வாறு தாம் நிற்கும் நிலைமைக்கேற்ப இறைவனைத் தந்தையாகப் பாவித்து, நிறுத்தி, பணி செய்கின்றனர். ஆண்டான் அடிமை நெறியிலும் அவ்வாறே. நாயகன் நாயகி நிலையில் தன்னை நாயகியாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற நெறி அவர்களால் விருப்பமுடன் ஏற்று, செயல் படுத்தப் பெறுகிறது. ஆனால் தோழமை நெறியைச் சுந்தரர் திருவாரூருக்குப் போவதற்குமுன் விரும்பி நின்றவருமல்லர்; அந்நெறியில் இறைவனைத் துய்க்க வேண்டும் எனப் பாடுபட்டவரும் அல்லர்.

இறைவன் 'தோழமை'யைக் கொடுத்தபோதும் அதை ஏற்றுச் சிறக்க வாழ்ந்தார் என்று சொல்வதற்கும் அவர் வாழ்வு இடந்தரவில்லை. ஆனால் தோழமை நெறியால் ஓரளவு தான் தவறுவதற்கு வாய்ப்பு உண்டாயிற்று என்ற வருத்தம் அவருக்கு உண்டாகியிருக்கிறது.

சுந்தரர் கேளாமலே கொடுத்த ஒன்று. இதற்கு விளக்கம் காண முற்பட்ட காலத்தே சில சான்றோர்கள் சுந்தரரைத் தோழனாக ஏற்றுக் கொண்டமைக்குரிய காரணம் அவருடைய அறிவுடைமையே என்றெல்லாம் அமைத்துக் கண்டார்கள்.

"அறிந்து செல்வம் உடையான் அளகைப் பதியான் தோழமைகொண்டு
உறழ்ந்த கல்வி உடையானும் ஒருவன் வேண்டும் என இருந்து
துறந்த முனிவர் தொழும் பரவை துணைவா நினைத் தோழமை [கொண்டான்
செறிந்த அறிவு வடிவமாத் திகழும் நுதற்கட் பெருமானே"

எனச் சிவப்பிரகாச சுவாமிகள் நால்வர் நான்மணிமாலையிற் குறிப்பிட்டு விளக்குகிறார்.

இறைவன் சுந்தரரைத் தனக்குத் தோழராக ஏற்றுக் கொண்டதன் உண்மைக் காரணம் யாது? இதுவும் அவரை ஆட்கொள்ளுதல் அல்லது தடுத்து ஆட்கொள்ளுதல் என்ற நெறிகளின் கீழே அமைக்கப் பெற வேண்டிய செயல்தானா? இவைகளுக்குள்ள விடைகளைச் சுந்தரர் வாழ்வியல் வரலாற்றை மேற்போக்காக நோக்குவதன் மூலம் கண்டுபிடிக்க முடியாது. [இத்தொடர் கட்டுரையின் இறுதியில் விளக்கப்பெறும்.]

"வன்தொண்டன் என்பதோர் வாழ்வு" என்று வன்தொண்டு நிலையைப் புகழ்ந்து அதற்கு ஏற்றம் கொடுத்துக் காணும் சுந்தரர் 'தோழமை நெறியை' அத்துணையளவுக்கு உயர்வு கொடுத்துக் காணவும் இல்லை; அனுபவிக்கவும் இல்லை. அவற்றிற்கு மாறான பலன்களையே அனுபவத்திற் பெற்றுள்ளார் என்பது முன்னுள்ள சான்றுகளால் அறியலாம்.

முடிப்புரை :

தம்பிரானுக்குத் தோழர் ஆன நெறி இறைவன் வலிய வந்து தந்த நெறி. சுந்தரர் தம் வாழ்வில் தாம் கேளாமலேயே இறைவனால் கொடுக்கப்பெற்ற ஒருமுறை. இறைவனால் ஆட்கொள்ளப் பெறுதல்; தடுத்தாட் கொள்ளப்பெறுதல் என்ற இரண்டற்கும் இணைந்து வாராத ஒருநெறி.

'தம்பிரான் தோழர்' என்ற நெறியையும் இணைத்து, ஆட்கொள்ளல் அல்லது தடுத்தாட்கொள்ளல் என்பவைகளுக்கு விளக்கம் காணுதல் கூடாத ஒன்று.

'வன்தொண்டன் என்பதோர் வாழ்வு' என்பது சுந்தரர் வரலாற்றை முழுவதுமாக இணைத்து, அவர் வாழ்வில் அமையும் பல்வேறு நிகழ்ச்சிகளையெல்லாம் உள்நின்று இணைக்கும் உயிரோட்டமாக விளங்கும் நெறி. "வன்தொண்டன் என்பதோர் வாழ்வு" என்ற தொடருக்கு உண்மை விளக்கம் காணும்போது இத்தோழமை நெறியும் புதிய ஒளியிட்டுத் தோற்றம் பெறுவதைக் காணலாம்.

௨

கவலை நமக்கேன்

டாக்டர். அ. மா. பரிமணம் எம்.ஏ., எம்.லிட். பிஎச். டி.

சிறு குழந்தை ஒன்று தளர்நடை நடந்து இங்குமங்கும் செல்கின்றது. கல்லிலும் பள்ளத்திலும் அடிவைத்து நடந்து துன்புறுகிறது. அருகிலுள்ள பூஞ்செடியில் மலரைப் பறித்து மகிழ்கின்றது. அச்செடியிலுள்ள முட்கள் குத்த அழுகின்றது. பக்கத்திலோடும் நாயைப் பிடிக்கத் துடிக்கின்றது. அதன் குரைப்பினைக் கேட்டு அஞ்சி நடுங்குகின்றது.

குழந்தை இப்போது தன் தாயினை அடைந்து விட்டது. முன் போலவே அங்குமிங்கும் நடந்து திரிகின்றது. ஆனால், கல்லும் பள்ளமும் காலினைத் துன்புறுத்தவில்லை. அன்னை அருகிருந்து வழிநடத்துகின்றாள். முள் குத்துவதில்லை. குழந்தையை முள் குத்தாது பார்த்துக் கொள்கிறாள். நாயின் குரைப்பு இப்போது அச்சம் தருவதில்லை. தன் அன்னை அருகில் இருக்கின்றாள் என்ற நம்பிக்கை அக் குழந்தைக்கு ஏற்பட்டு விட்டது.

அன்னையை அடைவதற்கு முன்னரும், அடைந்த பின்னரும் குழந்தைதான் செயல்பட்டது. தாயை அடையுமுன்னால் குழந்தையின் செயல்களுக்கு அக்குழந்தையே பொறுப்பாகியது. அடைந்த பின்னால் குழந்தையின் செயல்களுக்கு அதன் அன்னை பொறுப்பாகின்றாள். அன்னையின் துணையில்—அரவணைப்பில் இருக்கின்றோம் என்ற நிறைந்த நம்பிக்கையில் குழந்தை செயல்படுகின்றது. அந்த நம்பிக்கை குழந்தைக்கு வழிகாட்டியாக-பாதுகாப்பாக-நன்மை தருவதாக அமைந்து விடுகின்றது.

குழந்தை வளர்ந்து மனிதனாகின்றது. வளர்ந்த நிலையில் தான் பெற்றுள்ள ஐம்பொறிகளுக்கும் தானே தலைவன் என்றும், அவற்றால் உணர்தற்குரிய இவ்வுலகமும் அதன் இன்பமும் தனக்குரியன என்றும் கருதி மயங்குகின்றான். அவன் முயற்சியின் விளைவுகள் ஐம்புல இன்பங்களாக அமையும்போது மகிழ்கின்றான். அவை துன்பப் பயன் தருங்கால் துயருற்று வருந்தி வாடுகின்றான். தொடக்கத்தில் இன்பங்களாகத் தோன்றியனவெல்லாம் பின்னர்த் துன்பங்களாகக் காண்கிறான். தன் முயற்சிப் பயன் சிறியதாய்-துன்ப இயல்பினதாய்-அழியும் தன்மையதாய் முடியக் கண்டு கலங்குகின்றான். இந்நிலையில், எல்லாம் துன்பமாகத் தோன்றுகின்றன. தன் செயலில் எப்பொழுது, எவ்வாறு துன்பம் வருமோ என்று கவலை கொள்கின்றான்.

இறையருளால் 'தெய்வம் என்பதோர் சித்தம்' உண்டாகப் பெறுகிருன். அந்த உணர்வு அவனுள் வளர்ந்து நிறைகின்றது. அதன் நிறைவில், தான் தலைவன் என்றும், உலகம் தன் உடைமை என்றும் நினைத்த நினைப்பு நீங்குகிறது. உண்மையை உணர முடியாது மறைத்திருந்த மாயத்திரை-மாயைத்திரை நீங்குகின்றது. தான் இறைவன் இயக்க இயங்கும் ஒரு பாவை போன்றவன் என்றும், உலகம் அவ்விறைவனின் உடைமை யென்றும் உணர்கிருன். யான் என்றும் எனது என்றும் நினைத்த நினைப்பு அறுகின்றது. அவன் என்றும், அவன் செயல் என்றும் எண்ணும் எண்ணம் உதிக்கின்றது. தாயினை அடைந்து விட்ட குழந்தையினைப் போலாகி விடுகின்ருன்.

இந்த நிலை எய்துவதென்பது எளிதன்று. இறையருளால் இந்த நிலையடைந்தோரின் சீவபோதம் சிவபோதமாக மாறுகின்றது. அவர்கள்-தம் சித்தம் சிவமாகும். செய்தன தவமாகும். 'யான் எனது' அற்ற நிலையில் இயங்கும் இவர்களுடைய செயல்களுக்கு இவர்கள் பொறுப்பாகார். இன்ப துன்பங்களாகிய வினை விளைவுகள் இவர்களைப் பாதிப்பதில்லை. "இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான், துன்பம் உறுதல் இலன்" என்னுமாறு இவர்கள் துன்ப உணர்வு கொள்ளுவதில்லை. இத்தகைய அரிய நிலையினை எய்திய மணிவாசகப் பெருந்தகை, அவ்வியல்பினை-அனுபவத்தைத் தேனினும் இனிய கவிதையாக வடித்துக் காட்டிய திருவாசகம் வருமாறு:-

" அன்றே எந்தன் ஆவியும் உடலும் உடமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ
இன்ருே ரிடையூ றெனக்குண்டோ எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானே இதற்கு நாயகமே"

தமிழகத்தில் மலர்ந்த பக்தி இயக்கத்தின் முன்னேடிகளான நாயன்மார்களும் ஆழ்வார்களும் தமிழ் மக்கட்கு, இறையியல்பினை உணர்த்தும் அரிய தொண்டினை ஆற்ற முற்பட்டுப் பெரும் வெற்றி கண்டனர். அதன் விளைவாக, இறைவன் ஒருவன் உளன் என்று எண்ணுத சமயங்கள் மக்கள் மன்றத்திலிருந்து மறையத் தொடங்கின. பக்தி உணர்வு பெரு வெள்ளம் போலப் பெருக்கெடுத்தது. துன்ப உணர்வுகளையும், அவை பற்றிய அச்சங்களையும் மக்கள் மனத்திலிருந்து மறையச் செய்து, நம்பிக்கை தோற்றுவிப்பதைத் தங்கள் கடமையாகக் கொண்டனர், ஆழ்வார்களும் நாயன்மார்களும். இந்த நம்பிக்கையைத் தோற்றுவிப்பதில் அப்பரடிகளின் வாழ்வும், வாக்கும் பெரும் பங்கு கொண்டன.

நீற்றறையிலிடல், நஞ்சூட்டுதல், யானையை ஏவி இடறச் செய்தல், கல்லொடு கட்டிக் கடலிலிடல் ஆகிய கொடுமைகளை யெல்லாம் இறையருளால் வென்ற அப்பரடிகள் அந்த நன்மைகள் எல்லாம் இறைவன் தந்தன என்று உணர்ந்து கூறியுள்ள இடங்கள் பலவாகும்.

" நஞ்சமு தாக்குவித்தார் நனி பள்ளி அடிகளாரே"
" கொலைசெய் யானை தான் கொன்றிடு கிற்கு மோ"

" கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே"

இறைவனயடியார்கள் அச்சமும் கவலையும் அடைய வேண்டியதில்லை என்பது அடிகள் உணர்த்திய உண்மையாகும். "அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை" என்னும் கட்டுரை, 'சுண்ண வெண் சந்தனச் சாந்து' எனத் தொடங்கும் பதிக பாடல்கள் ஒவ்வொன்றின் முடிவிலும் ஈற்றடி மகுடமாக அமைத்து வலியுபுறுத்திக் காட்டியுள்ளார். மாறுபட்ட பல்லவ மன்னன் அனுப்பிய ஆணைக்கு மறுப்பாக அடிகள்,

" நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தி லிடர்ப் படோம் நடலை இல்லோம்
ஏமாப் போம் பிணி யறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங் கரன் நற் சங்க வெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம் மலர்ச் சேவடியிணையே குறுகி னோமே"

எனக் கூறிய மொழி, மறு மாற்றத் திருத்தாண்டகமாக மலர்ந்துள்ளது. இந்த மறுமொழி தவறுபட்ட அரசினை எதிர்த்து நின்று முழங்கிய முதல் முழக்கமாகும். இம் முழக்கமே அல்லற்பட்டு ஆற்றுது அழுது நிற்கும் மனிதகுலம், கவலையை, கொடுமையை, அல்லலை, அநீதியை எதிர்த்து நிற்க ஊக்க மளித்துவரும் முரசொலியாகும்.

'சாதலின் இன்னாத தில்லை' என்பது வள்ளுவம். அந்த இன்னா-மையை-எமபயத்தை எண்ணிக் கவலை கொள்ளாத திண்மையை இறை வழிபாட்டினுல் எய்தலாம் என மக்கட்கு நம்பிக்கை ஊட்டுகின்றுர்.

" கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடையானுளன் நாமுளோம்
எற்றுக் கோ நமனுல் முனிவுண்பதே"

பக்தியின் பாலராகிப் பரமனைப் பணிந்து நிற்கும் உத்தமர்கள் உலகியல் துன்பங்களைப் பற்றிக் கவலைகொள்ள வேண்டியதில்லை. கவலை கொள்ளவும் மாட்டார்கள் என்பதைப் பலவாறு விளக்கியுள்ளார். மனிதர்களின் சீற்றங்களேயே யன்றி இயற்கையின் சீற்றங்களைக் கண்டு கூட அந்த உத்தமர்கள் கவலை கொள்வதில்லை. உலகில் இயற்கையின் கோரச் செயல்களாகக் கண்டு, மக்கள் அஞ்சிக் கவன்ற கொடுமைகளை அடுக்கி அவற்றை யெல்லாம் பற்றிக் கவலை கொள்ளாத நிலைமையை அப்பரடிகள் அழகிய தொரு திருப் பாடலில் விளக்குகின்றுர்.

மின்னி இடித்து முழங்கி உயிர்க் குலத்தை நடுங்கச் செய்கிறது வானம். நடுங்கி, முழங்கி, வெடித்து உயிர்க் குலத்தை அஞ்சச் செய்கிறது பூமி. இறைவனுக்கு ஆட்பட்ட உத்தமர்கள் இவற்றைக் கண்டு கலவ

கொள்வதில்லை. அவர்கள் இச் செயல்களுக்கும், இவற்றின் பயன்களுக்கும் தங்களைப் பொறுப்பாளிகளாகக் கருதுவதில்லையே. அனைத்தும் அவன் செயலாகவேயன்றோ எண்ணுகின்றனர். "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்பதன்றோ அவர்கள் கோட்பாடு! அத்தகையவர்கள் கவலைப்படாத தன்மையினை அப்பரடிகள் "வானந்துளங்கிலென் மண் கம்பமாகிலென்" என்ற வினா வமைப்பில் வெளிப்படுத்துகின்றார்.

வானம் துளங்குவதற்கும், மண் கம்பமாவதற்கும் மேற்பட்ட இயற்கையின் கொடுமைகள் சிலவற்றையும் எண்ணிப் பேசுகின்றார். நிலையில் திரியாது நிற்பதற்கு மலை ஒரு எடுத்துக் காட்டாகும். அந்த வானோங்கிய நெடுமலையும் அசைந்து, நிலை தடுமாறி அழிவைச் செய்கின்றது. குளிர்ந்த பெருங்கடலும் நீர் வற்றி, மீன் குலம் முதலிய நீர் வாழ் உயிரினங்கள் இறக்கின்றன. இது நிலத்துயிர்கள் அழிவெய்துவதற்கான முன்னிகழ்ச்சியாகும். இப்பொழுதும் கூட ஆண்டவனுக்கு ஆட்பட்ட அடியார்கள் கவலை கொள்ளுவதில்லை. இதனை, "மால் வரையும் தானந்துளங்கித் தலை தடுமாறிலென், தண் கடலும் மீனம் படிலென்" என்கின்றார். இவற்றிற்கும் மேலாக விண்மீன்களோடு ஞாயிறும் திங்களும் விழும் நிலை வந்தாலும் கவலைப்படுவதில்லை என்பதனை "விரி சுடர் வீழிலென்" என்று கூறுகின்றார். சூரியன் எங்கே தோன்றினால் எனக்கென்ன என்னும் கருத்தில், "எங்கெழிலென் ஞாயிறு எமக்கு" என எழுந்த திருவாசக மதுகையை இங்குக் காணலாம்.

பற்றுக்களை நீக்கப் பற்றற்றவனைப் பற்றுதல் வேண்டும் என்பதும், மனக்கவலை மாற்றத் தனக்குவமை இல்லாதவன் தாளைச் சேர்தல் வேண்டுமென்பதும் வள்ளுவக் கோட்பாடாகும். அவ்வாறே ஊனங்களை-கேடுகளைக் கண்டஞ்சாதிருக்கக் கேடிலியைச் சார்தல் வேண்டும். அப்படிச் சார்ந்து கவலை நீங்கியவர்களை "ஊனமொன்றில்லா ஒருவனுக்காட்பட்ட உத்தமர்கள்" எனக் கூறுகின்றார்.

இறைவன் ஊனம் இல்லாதவன்-ஊனம் எய்தாதவன் என்பதனை அவனாற்றிய அருஞ்செயல் ஒன்றைச் சுட்டித் தெளிவுபடுத்துகிறார். அமரர்களும் அவுணர்களும் அமுதம் வேண்டிக் கடல் கடைந்த போது, அனைவரும் தம் அழிவினை நினைந்து அஞ்சுமாறு எழுந்த ஆலகால நஞ்சினை அவர்கள் உய்வதற்காகத் தானுண்டு அதனால் நீலகண்டராய் விளங்கும் தியாகப் பெருநிலையைச் சுட்டி, இறைவனை "வேலை நஞ்சுண்டு ஊனம் ஒன்றில்லா ஒருவன்" என்று அழகுறக் காட்டுகின்றார்.

சிவபெருமான் ஆற்றிய அருஞ் செயல்கள் பலவற்றுள்ளும் நஞ்சுண்டு கண்டங்கறுத்து விளங்கும் தன்மையை,

"கறை மிடறு அணியலும் அணிந்தன்று அக்கறை
மறை நவில் அந்தணர் நுவலவும் படுமே",

"பால் புரை பிறை நுதற் பொலிந்த சென்னி
நீல மணி மிடற் றொருவன்",
"பெரு விறல் அமரர்க்கு வென் றிதந்த
கறை மிடற் றண்ணல்"

எனப் பலவாருகப் புறநானூற்றுப் பாடற் பகுதிகள் போற்றுகின்றன.

சிவபெருமான் நஞ்சுண்ட சிறப்பினை இளங்கோவடிகள் வேட்டுவர்களின் வரிப் பாடல் அமைப்பில் வைத்துப் போற்றியிருப்பது குறிப்பிடத் தக்கது. சைவ சமய தத்துவ நுட்பம் பொதிந்த அவ்வழகிய பாடற் பகுதி வருமாறு:-

"விண்ணோர் அமுதுண்டும் சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டு இருந்தருள் செய்குவாய்".

கொற்றவையைச் சிவ வடிவில் கொண்டும், கண்டும் வேட்டுவர்கள் வழிபடுவதாக அமைந்துள்ள இப்பாடற் பகுதி, சிவ சக்திகளின் அபேதத் தன்மையினை அழகுறக் காட்டுகிறது. சிவத்திலிருந்து சக்தி தோன்றும் உண்மையினை சைவ சித்தாந்த சாத்திரம் "சிவசக்தி தன்னை ஈன்றும்" என்று கூறுகிறது. கொற்றவையை-சக்தியை சிவமாகவே கருதிப் போற்றும் சைவ சித்தாந்த நுடபம் மிக்க ஞானம் வேட்டுவர்பால் இலங்கியதாக இளங்கோவடிகள் காட்டியுள்ளதனால், எளிய மக்களிடம் இறையுணர்வும், சமய ஞானமும் இணைந்து விளங்கிய பாங்கு புலனாகின்றது. எவ்விதத் துன்பங்களையும் பற்றிக் கவலை கொள்ளாது விளங்கும் அடியார்களின் இயல்பினை விளக்கும் தேவாரப் பாடல் ஒன்றினைக் காண்போம்.

"வானந் துளங்கிலென் மண் கம்பமாகி லென் மால் வரையும்
தானந் துளங்கித் தலை தடுமாறி லென் தண் கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண்டு
ஊன மொன்றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே".

திருநேரிசையிற் கூறிய இதே கருத்தினை வேறு வகையாக மாற்றி, ஆண்டவன் இருக்க அடியார்கள் எதற்கு அஞ்ச வேண்டும் என வினா வடிவில் அமைத்துள்ள குறுந்தொகைப் பாடலும் இதனோடு ஒருங்கு வைத்துச் சிந்திக்கத் தக்கதாகும்.

"தப்பி வானம் தரணி கம் பிக்கிலென்
ஒப்பில் வேந்தர் ஒருங்குடன் சீறிலென்
செப்ப மாஞ் சேறைச் செந்நெறி மேவிய
அப்பனார் உளர் அஞ்சுவ தென்னுக்கோ".

தாயை அடைந்த குழந்தைகள் தளர்ச்சியடைய வேண்டியதில்லை. தாயினும் சாலப் பறிந்தோம்பும் இறைவனை அடைந்த ஆன்மாக்களும் தளர்ச்சியடைய வேண்டா. அறியாமையால் இறைவனை அடைய முடியாது கவலைப்படும் மனிதகுலம் அக்கவலை நீக்குவதற்காம் வழியினை நாயன்மார்கள் காட்டியுள்ளார்கள். அவர்கள் காட்டிய வழி நின்று கவலைகளைத் துடைப்போமாக.



நாயன்மார் நால்வர்

க. கலியாணம், எம்.ஏ., டிப். எக்கான்.,

‘நாலுபேர் சென்ற வழியில் செல்’ என்பது நம்மிடை வழங்கும் ஒரு பழமொழி. அந்த நாலுபேர் நம்முடைய சமயாசாரியார்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் என்று கூறுவது ஆன்றோர் மரபு. இந்த நால்வர் திருநட்சத்திரங்களும் தமிழ் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வருவது குறிப்பிடத்தக்கது. சித்திரைச் சதயத்தில் அப்பர், வைகாசி மூலத்தில் சம்பந்தர், ஆனிமகத்தில் மாணிக்கவாசகர், ஆடிச்சுவாதியில் சுந்தரர் ஆகிய நால்வரும் முத்தியடைந்த நாட்கள். ஆனால் நாம் இங்கு எழுதுவது வேறு நான்கு நாயன்மார் பற்றியது. அதாவது வைகாசி மூல நட்சத்திரத்தில் முத்திப் பேறெய்திய திருஞானசம்பந்தர், முருகர், திருநீலநக்கர், திருநீலகண்டயாழ்ப்பாணர் ஆகிய நால்வர்.

திருஞானசம்பந்தர் : சீகாழிப்பகுதியிலே சிவபாத இருதயருக்கும் பகவதியாருக்கும் திருமகவாகத் திருவவதாரம் செய்தார். மூன்றாவது ஆண்டிலே உமையம்மையாரால் ஞானப்பால் ஊட்டப்பெற்று “தோடுடையசெவியன்” என்று தொடங்கும் திருப்பதிகம் பாடியருளினார். திருநெல்வாயில் அரத்துறை என்ற தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் எம்பெருமான் திருவருளால் முத்துச்சிவிகை முத்துக்குடை, பொற்சின்னம் ஆகியவை பெற்றார். “எந்தை ஈசன் எம்பெருமான்’ என்ற பாடலைப் பாடி, ஐந்தெழுத்து ஓதி முத்துப் பல்லக்கில் ஏறினார். சம்பந்தர் திருப்பாச்சிலாச் சிராமம் என்ற தலத்திற்குச் சென்றபோது கொல்லி மழவன் மகள் முயலகன் என்ற நோயால் பீடிக்கப்பட்டிருப்பதை அறிந்து “மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பு” என்று பாடி அந்நோயைப் போக்கியருளினார். திருச்செங்கோட்டுக்குச் சென்றபோது அடியார்கள் குளிர் சுரத்தால் துன்புற்றபோது “அவ்வினைக் கிவ்வினை” என்னும் பதிகம் பாடி அவர்களின் நோயை நீக்கியருளினார். பட்டீச் சரத்தில் இறைவன் திருவருளினால் முத்துப் பந்தர் பெற்றார். திருவாவடுதுறையில் பொற்கிழி பெற்றார். திரு மருகலில் அரவு தீண்டி மாண்ட வணிகனை “சடையாய் எனுமால்” என்னும் பதிக

மோதி உயிர் பெறச் செய்தார். திருவீழி மிழலையில் இறைவனிடமிருந்து பஞ்சம் தீரப் படிக்காசு பெற்ருர். திருமறைக் காட்டில் அப்பர் பெரு மானல் பாடித் திறக்கப் பெற்ற திருக் கதவத்தை அடைக்கப் பாடியரு ளினர். பாண்டிய மன்னனின் வெப்பு நோயை 'மந்திரமாவது நீறு' என்னும் பதிகம் ஓதி ஒழித்தருளினுர். அமணருடன் அனல் வாதம் செய்தார். அவர்கள் தீயிலிட்ட ஏடு எரிந்து போக, சம்பந்தர் பாசுரம் பதித்த ஏடு பச்சையாக இருந்தது. பின்னர் அமணர் ஆற்றிலிட்ட ஏடு வெள்ளத்துடன் அடித்துச் செல்ல ஆளுடைய பிள்ளையார் இட்ட ஏடு எதிர் சென்று ஏடகம் அடைந்தது. இப்படியாக அனல்வாதம் புனல் வாதம் இவற்றில் வெற்றி கண்டார். பாண்டிய மன்னனும் மக்களும் அமணர் சமயம் விட்டுச் சைவம் சார்ந்தனர். சோழ நாட்டிற்குத் திரும்பிய பின் போதி மங்கையில் புத்தருடன் வாதம் செய்து வெற்றி பெற்ருர். படகோட்டி யில்லாத போது அடியார்களுடன் படகிலேறி "கொட்டமே கமழும்" என்ற பாடலைப் பணித்து கொள்ளம் பூதூர் என்னும் தலத்தில் அக்கரை சேர்ந்தார். திருவோத்தூர் என்னும் பதியில் "குரும்பை ஆண்பனை" என்னும் பெரும் பதிகம் பாடி ஆண்பனை யைப் பெண்பனையாக்கினர். திருமயிலாப்பூரில் சிவநேயச் செட்டியாரின் பெண் பாம்பு கடித்து இறந்த பின்பு அதை யெரித்து வைத்திருந்த சாம்பலையும் எலும்பையும் கபாலீச்சரர் திரு முன் கொண்டு வரச் செய்து "மட்டிட்ட புன்னையும்" என்னும் பதிகம் ஓதி அந்தப் பெண்ணை எழுப்பி யருளினுர். சோழ நாட்டிற்கு மீண்டதும் நம்பியாண்டார் நம்பி என்பவரின் திருமகளாரை மணம் பேசி முடிவு செய்யப் பெற்றது. திருநல்லூர்ப் பெரு மணத்தில் திருமணச் சடங்குகள் நடந்தன. அவ்வமயம் ஒரு பெருஞ்சோதி தோன்றியது அதனுள் அங்குள்ள அனைவரும் போகப் பணித்து, தாமும் காதலியைக் கைப்பிடித்து சோதி யுள் புகுந்து ஒன்றி உடனுனர். இது நிகழ்ந்தது வைகாசி மூலநட்சத் திரத்தன்று.

முருகநாயனுர் : திருப்புகலூரில் அவதரித்தார். நந்தவனம் அமைத்து நாள்தோறும் மலர் பறித்து, மாலை கட்டி வர்த்தமானீச்சுரப் பெரு மானுக்குச் சாத்தி வழிபட்டு வந்தார். அறுமுகன் திருப்பெயர் கொண் டவர்; அறு தொழில் வேட்ட அந்தணனுர்; கோவை, இண்டை, மாலை, கண்ணி, பிணையல், தொடையல் என்று அறுவகை மலர் கட்டி இறை வனுக்கு அணிந்து மகிழ்ந்தார். நல்லூர்ப் பெருமணத்தில் ஞானசம்பந்த ருடன் சோதியில் கலந்தார்.

திருநீலநக்க நாயனுர் : திருச்சாத்த மங்கையைச் சார்ந்தவர். அவர் சிவபூசை செய்யும் போது இறைவன் திருமேனியில் சிலந்திப் பூச்சி விழ அவர் மனைவியார் அதைவாயால் ஊதி அகற்றினர். அது அனுசிதம் என்று மனைவியை வெகுண்டார். பின்னர் இறைவன் உணர்த்த அது அன்புச் செயல் என்று அறிந்தார். சம்பந்தப் பெருமான் திருமணத்தை நடத்தி அவருடன் சோதியில் கலந்து சிவபெருமான் திருவடி நீழல்

எய்தினர். இவ்வந்தணர் தம் இல்லத்தில் வேள்விக் கூடத்தில் திருநீலகண்டயாழ்ப்பாணர் அவர் மனைவியார் ஆகிய தாழ்ந்த வகுப்பினருக்குத் தங்க இடந்தந்து பெருமை பெற்றவர்.

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனர்: திரு எருக்கத்தம் புலியூரில் அவதரித்தவர். அவர் மனைவியார் மதங்க சூளாமணியார். இருவரும் திருஞானசம்பந்தருடன் பல தலங்களுக்கும் சென்று அவர் பாடல்களை யாழில் அமைத்துப் பாடும் அரும் பணியைச் செய்து வந்தனர். திருநல்லூர்ப் பெருமணத்தில் எழுந்த சோதியில் சம்பந்தருடன் புகுந்து பெருமான் திருவடி சேர்ந்தார்.

மேலே சொல்லப் பெற்ற சம்பந்தர், முருகர், நீலநக்கர், நீலகண்ட யாழ்ப் பாணர் ஆகிய நான்கு நாயன்மார்களும் முத்தி பெற்ற நாள் வைகாசி மூலம். அது வைகாசி 13-ஆம் நாள் (27-5-75) ஆகும் அதை யொட்டியே இக்கட்டுரை தீட்டப் பெற்றது.

மற்றும் இந்த வைகாசித் திங்களில் கீழ்க்காணும் அடியார்களின் திருநாட்களும் வருகின்றன.

24-பரணி-கழற்சிங்க நாயனர்
29-புனர்பூசம்-நம்பியாண்டார் நம்பிகள்
30-பூசம்-நமிநந்தியடிகள்
,, ,, சேக்கிழார் சுவாமிகள்
31-ஆயிலியம்-சோமாசிமாறநாயனர்.

இந்த நாட்களை யெல்லாம் கொண்டாடுவது நம்மனோர் கடமை.

சிறப்புடையவை மூன்று

304 ஆம் பக்கத்திலுள்ள கேள்விக்கு விடை

அயன் அரி அரன்-மும்மூர்த்தி
பதி பசு பாசம்=கடவுள் உயிர் உலகம்-முப்பொருள்
அறம் பொருள் இன்பம்-முப்பொருள்
மனம் வாக்கு காயம்-முக்கரணம்
இயல் இசை நாடகம்-முத்தமிழ்
சகம் சீவம் பரம்-முப்பொருள்
சந்திரன் சூரியன் அக்கினி-முக்கண்
அவன் அவள் அது-மூவினம்
மூர்த்தி தலம் தீர்த்தம்-தலமகிமை
சத்துவம் இராசதம் தாமதம்-முக்குணம்
சேரன் சோழன் பாண்டியன்-மூவேந்தர்
குரு இலிங்கம் சங்கமம்-வழிபாடு
கலைமகள் திருமகள் மலைமகள்-முத்தேவியர்

தொகுப்பு—மயிலைவாணன்

சமயபோதனை

பாடம் 14 | வினாக்கள் | மே 1975

வினாக்கள் இந்த இதழ்க் கட்டுரைகள் பற்றியனவே ஆகும். விடைகளை முழு அளவு (Foolscape size) இரண்டு தனித் தாள்களில் நான்கு பக்கத்திற்குள் எழுதி இச்செயலகத்திற்கு 5-6-1975க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும். சந்தா எண், பெயர், வயது, முகவரி இவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

மதிப்பெண் சமம்] [மதிப்பெண் 100

1. பணத்திற் புரண்டு பதவியிலேறுபவரின் இறுதி நிலையையும் அதை நீக்கும் வழியையும் கூறுக.
2. 'நாலுபேர் சென்ற வழியில் செல்' என்னும் பழமொழியின் பொருளையும் சிறப்பையும் விளக்குக.
3. காஞ்சி சக்தி லிங்கத்தின் தனிச்சிறப்பும் தத்துவமும் யாவை?
4. "மழைவேண்டின் அதற்கு ஏதுவான நற்செயலை மேற்கொள்ளல் வேண்டும்"—விளக்குக.
5. சுந்தரர் தோழமை பெறற்குக் காரணம் யாது?
6. இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள தொடர்பை தாய்சேய் உவமை கொண்டு விளக்குக.
7. இறைவன் ஊனமிலாதான் என்பதை அப்பரடிகள் எவ்வாறு காட்டுகின்றார்?
8. முருகநாயனார், திருநாளைப்போவார் நாயனார் ஆகியோர் வரலாற்றை நம்பியாண்டார் நம்பிகள் கூறுமாற்றான் விளக்குக.
9. நம் தலையின் விதியழிப்பது யாது? எங்ஙனம்?
10. திருநீலநக்க நாயனார் வரலாற்றை வரைக.

விடைகளை எழுதி உரிய அஞ்சல்தலை யொட்டிக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும்:—

"அருளோசை"

தமிழ்நாடு தெய்விகப் பேரவை,

9, மகாராஜா சூரியராவ் சாலை,

ஆள்வார்பேட்டை,

சென்னை-600 018.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நம்பியாண்டார் நம்பி - கலித்துறைத் திருவந்தாதி

(குன்றக்குடி ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் பதவுரையுடன்)

பிரதி செய்தவர்: சேக்கிழார்தாசன்

மூர்த்தி நாயனர்

அவந்திரி குண்டம ஞவதின் மாள்வனென் றன்ருலவாய்ச்
சிவன்றிரு மேனிக்குச் செஞ்சந் தனமாச் செழுமுழங்கை
யுவந்தொளிர் பாறையிற் றேய்த்துல காண்டவொண் மூர்த்தி தன்னூர்
நிவந்த பொன் மாட மதுரா புரியென்னு நீள்பதியே. 17

(இ-ள்): வீணே திரிகின்ற குண்டராகிய சமணராவதினும் உயிர் விடுவேனென்று அன்றைக்குத் திருவாலவாயின் கணுள்ள சிவபிரான் திருமேனிக்குச் சிவந்த சந்தனமாக செழுவிய முழங்கையை விரும்பி விளங்குகின்ற சந்தனச் சாணையில் தேய்த்து நிலவுலகத்தை அரசாண்ட ஒள்ளிய மூர்த்தி நாயனரது ஊர் யாதெனில் ஓங்கிய பொன்னுலாகிய மாடங்களையுடைய மதுராபுரி யென்று சொல்லும் பெரிய ஊராம். (எ-று) ஏ-அசை.

முருகநாயனர்

பதிகந் திகழ்தரு பஞ்சாக் கரம்பயி ஞவினன்சீர்
மதியஞ் சடையார்க் கலர்தொட் டணிபவன் யான்மகிழ்ந்து
துதியுங் கழற்சண்பை நாதற்குத் தோழவன்வன் றெண்டரம்பொன்
னதிகம் பெறும்புக லூர்முரு கன்னெனு மந்தணனே. 18

(இ-ள்): ஆளுடைய பிள்ளையார் திருப்பதிகத்தில் விளங்க அருளிய திருவைந்தெழுத்துத் தங்கிய நாவையுடையவரும் சிறப்பமைந்த இளம்பிறை வாழும் சடை முடியையுடைய சிவபிரானுக்கு மலர் மாலையைத் திருமேனியைத் தீண்டிச் சாத்தும் முடியையுடையவரும் நான் மகிழ்ச்சியடைந்து துதி செய்யும் திருவடிகளையுடைய ஆளுடைய பிள்ளையார்க்கு நண்பரும் யாரெனில்; நம்பியாரூரர் அழகிய பொன்னை அதிகமாகப் பெற்றுக் கொண்ட திருப்புகலூரின் கண் அவதரித்த; முருக நாயனரென்னும் மறையவர். (எ-று). ஏ-அசை.

உருத்திரபசுபதி நாயனர்

அந்தாழ் புனறன்னி லல்லும் பகலுநின் ருதரத்தா
லுந்தாத வன்பொடு ருத்திரஞ் சொல்லிக் கருத்தமைந்த
பைந்தா ருருத்திர பசுபதி தன்னற் பதிவயற்கே
நந்தார் திருத்தலை யூரென் றுரைப்பரிந் நானிலத்தே. 19

(இ-ள்): அழகுடைய ஆழ்ந்த சலத்தில் இரவும் பகலும் ஓதுங்காலந் தவறாமல் விருப்போடு நின்று வழுவாத பேரன்பால் உருத்திரத்தை யோதி; மனமொருப்பட்ட பசிய தாமரை மாலையையுடைய உருத்திர பசுபதி நாயனாருடைய நல்ல திருப்பதி யாதெனில் வயலினிடத்துச் சங்குகள் தங்கிய திருத்தலையூரென்று விரிந்த இந்நிலவுலகத்தில் அறிஞர் கூறுவர். (எ-று). ஏ-இரண்டும் அசை.

திருநாளைப் போவார் நாயனார்

நாவார் புகழ்த் தில்லை யம்பலத் தானருள் பெற்றுநாளைப்
போவா னவனும் புறத்திருத் தொண்டன்றன் புன்புலைபோய்
மூவா யிரவர்கை கூப்ப முனியாய வன்பதிதான்
மாவார் பொழிறிக ழாதனூ ரென்பரிம் மண்டலத்தே. 20

(இ-ள்): அறிஞர்கள் நாவில் துதிக்கும் புகழையுடைய தில்லையம் பலத்தின்கணுள்ள நடேசப் பிரான் திருவருளைப் பெற்றுத் தன்னுடைய சிறுமையான புலைத்தன்மை நீங்கித் தில்லை மூவாயிரவர்கள் கை கூப்பி வணங்க மறை முனிவரான நாளைப் போவாரென்னும் புறத்தொண்டரது ஊராவது யாதெனில் வண்டுகள் ஒலிக்கின்ற சோலை சூழ்ந்த ஆதனூரென்று இந்நிலவுலகத்தில் அறிஞர்கூறுவர். (எ-று). தான், ஏ-அசை.

திருக்குறிப்புத் தொண்ட நாயனார்

மண்டும் புனற்சடை யான்றமர் தூசெற்றி வாட்டும்வகை
விண்டு மழைமுகில் வீடா தொழியின்யான் வீவனென்று
மிண்டும் படர்பாறை முட்டு மெழிலார் திருக்குறிப்புத்
தொண்டன் குலங்கச்சி யேகா லியர்தங்க டொல்குலமே. 21

(இ-ள்): கங்கை நீர் நிறைந்த சடையையுடைய சிவபிரான் அடியாரது கந்தையைக் கல்லில் அழுக்கறுத்து உலர்த்திக் கொடுக்கும் முறைமையாகக் கூறி வாங்கி அப்பொழுது மேகங்கள் பொழியும் மழையை விடாதொழிந்தால் யான் உயிர் விடுவேனென்று நெருங்கியிருக்கும் பெரிய துறைக் கல்லில் தன் தலையை மோதும் அழகிய திருக்குறிப்புத்தொண்ட நாயனாரது குலம் யாதெனில் காஞ்சி நகரத்தின் கணுள்ள வண்ணார்களது பழையகுலமாம். (எ-று). ஏ-அசை.

சண்டேசுர நாயனார்

குலமேறிய சேய்ஞ லூரிற் குரிசில் குரை கடல்சூழ்
தலமே றியவிறற் சண்டிகண் டீர்தந்தை தாளிரண்டும்
வலமே றியமழு வாலெறிந் தீசன் மணிமுடிமே
னலமே றியபால் சொரிந்தலர் சூட்டிய நன்னிதியே 22

(இ-ள்): உயர்குலத்து மறையவர்கள் வாழும் திருச்சேய்ஞலூரில் அவதரித்த முதல்வராகிய பிதாவினது காலிரண்டையும் வெற்றி மிக்க மழுவாயுதத்தால் வெட்டி சிவபிரான் திருமுடியின்மேல் நன்மை மிக்க ஆவின் பாலைத் திருமஞ்சன மாட்டி மலர்களைச் சூட்டி வழிபட்ட நல்ல நிதிபோல்வார் ஒலிக்குங் கடல்சூழ்ந்த நிலவுலகத்தில் விளங்கிய பத்தி வலியையுடைய சண்டேசுர நாயனாரென்று அறிஞர்களே அறிந்து கொள்ளுங்கள். (எ-று). ஏ-அசை.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

நிதியார் துருத்திதென் வேள்விக் குடியாய் நினைமறந்த
மதியேற் கறிகுறி வைத்துப் புகர்பின்னை மாற்றிடென்று
துதியா வருள்சொன்ன வாறறிவா ரிடைப் பெற்றவன்கா
ணதியார் புனல்வய ஞவலர் கோனென்னு நற்றவனே. 23

(இ-ள்): செல்வம் நிறைந்த திருத்துருத்தியிலும் தெற்கின் கணுள்ள திருவேள்விக்குடியிலும் பகலிலும் இரவிலும் முறையே வாழும் முதல்வரே; உம்மை மறந்த மதியையுடைய எனக்கு; உம்மை அறியும் குறியை முன்னே அருளிப்பின் உடம்பின்கணுள்ள பிணியை நீக்கென்று துதித்து; அவ்விரு தலத்திற்கும் ஒருவராய் வீற்றிருக்கும் சொன்னவாறறிவாரெனும் சிவபிரானிடத்துத் திருவருள் பெற்றவர் யாரெனில்; ஆற்றின்கணுள்ள நீரானது பாய்கின்ற வயல்சூழ்ந்த திருநாவலூரரென்னும் நல்லதவத்தினர். (எ-று) காண், ஏ-அசை.

திருநாவுக்கரசு சுவாமிகள்

நற்றவ னல்லூர்ச் சிவன்றிருப் பாதந்தன் சென்னி வைக்கப்
பெற்றவன் மற்றிப் பிறப்பற வீரட்டர் பெய்கழற்கு
ஞற்றவ னுற்ற விடமடை யாரிட வொள்ளமுதாத்
துற்றவ னாமூரி னாவுக்கர செனுந் தூமணியே. 24

(இ-ள்): நல்ல தவத்தினை யுடையோரும் திருநல்லூரில் வீற்றிருக்கும் சிவபிரான் திருவடிகளைத் தன் சிரசில் சூட்டியருளப் பெற்றோரும் அதன்றி இப்பிறவி நீங்கும்படி வீரட்டேசரது வீரக்கழலணிந்த திருவடியைப் புகலாக அடைந்தோரும் அமுதோடு வரவிய நஞ்சைச் சமணர்களிட அவ்விடத்தை ஒள்ளிய அமுதமாகத் திருவமுது செய்தோரும் யாரெனில் திருவாமூரின் கண் அவதரித்த திருநாவுக்கரசென்னுந் தூயமணி போல்வார். (எ-று). ஏ-அசை.

மணியினை மாமறைக் காட்டு மருந்தினை வண் மொழியாற்
றிணியன நீள்கத வந்திறப் பித்தன தெண்கடலிற்
பிணியன வன்கன் மிதப்பித்த சைவப் பெருநெறிக்கே
யணியன நாவுக் கரையர்பி ரான்றன் னருந்தமிழே. 25

(இ-ள்): திருநாவுக்கரையாரகிய பிரானரது அரிய திருப்பதிகங்கள்; சிந்தாமணி போலும் திருமறைக் காட்டின் கண் வீற்றிருந்தருளும் பிறவி நோய்க்கு மருந்தாயுள்ள சிவபிரானை வளவிய சொன்னயத்தால் திண்ணிய நீண்ட கதவைத் திறக்கச் செய்வித்தன தெள்ளிய கடலினிடத்துப் பிணிக்கப்பட்ட வலிய கல்லை மிதக்கச் செய்தன சைவமாகிய நன்மார்க்கத்துக்கு அலங்கார மாயுள்ளன. (எ-று). ஏ-இரண்டும் அசை.

குலச்சிறைநாயனர்

அருந்தமி ழாகரன் வாதி லமணைக் கழுநுதிமே
லிருந்தமிழ் நாட்டிடை யேற்றுவித் தோனெழிற் சங்கம் வைத்த
பெருந்தமிழ் மீனவன் றன்னதி காரி பிரசமல்கு
குருந்தவிழ் சாரன் மணமேற் குடிமன் குலச்சிறையே. 26

(இ-ள்): ஆளுடைய் பிள்ளையார் வாதில் தோற்ற சமணர்களைப் பெரிய பாண்டி நாட்டின் கண் கழுவிலேற்று வித்தவரும் அழகிய தமிழ்ச் சங்கத்தை ஓங்கச் செய்த பெருமையினையுடைய தமிழை யுணர்ந்தகூன்பாண்டியன் மந்திரியும் யாரெனில் தேன் நிறைந்த குருந்த மரங்கள் அலர்ந்த நெய்தனிலத்தில் மண மேற்குடியில் அவதரித்த முதல்வராகிய குலச்சிறை நாயனர். (எ-று) ஏ-அசை.

பெருமிழலைக் குறும்பநாயனுர்

சிறைநன் புனற்றிரு நாவலூ ராளி செழுங்கயிலைக்
கிறைநன் கழலுளை யெய்து மிவனருள் போற்றவின்றே
பிறைநன் முடிய னடியடை வேனென் றுடல்பிரிந்தா
னறைநன் மலர்த்தார் மிழலைக் குறும்ப னெனுநம்பியே. 27

(இ-ள்): கரையோடு கூடிய நல்ல நீர் சூழ்ந்த திருநாவலூரர்; செழுமையான நொடித்தான் மலைக்கு முதல்வராகிய சிவபிரான் திருவடியை நாளைத் தினத்தில் அடைவார் அதனுல்; இந்நாவலூரரது திருவருளைத் துதிக்கும்படி நல்ல பிறையணிந்த திருமுடியை யுடைய சிவபிரான் திருவருளை இன்றைக்கே அடைவேனென்று உடம்பை விட்டுச் சென்ருர் யாரெனில் வாசனை கமழும் நல்ல மலர் மாலையை யணிந்த பெருமிழலைக் குறும்ப நாயனுரென்னும் பெருமையிற் சிறந்தோர். (எ-று) ஏ. அசை.

காரைக்காலம்மையார்

நம்பன் றிருமலை நான்மிதி யேனென்று தாளிரண்டு
மும்பர் மிசைத்தலை யானடந் தேற வுமைநகலுஞ்
செம்பொன் னுருவனென் னம்மை யெனப் பெற்றவள் செழுந்தேன்
கொம்பி னுகுகாரைக் காலினின் மேயகுல தனமே. 28

(இ-ள்): சிவபிரான் வீற்றிருந்தருளும் நொடித்தான் மலையை யான் மிதிக்க மாட்டேனென்று; தன் இரண்டு திருவடிகளும் மேலாகத் தலையானடந்து செல்ல; உமையம்மை வியப்பு நகை செய்யவும்; அப்பொழுது சிவந்த பொன் போலும் திருமேனியையுடைய சிவபிரான் என் அம்மையே யென்று அழைக்கப் பெற்றவர் யாரெனில்; செழுவிய தேனுனது மரக்கொம்பினின்றும் சிந்தா நின்ற; காரைக் காலென்னும் ஊரில் அவதரித்த எமது குலத்துக்கு ஒரு முதல்வி. (எ-று) ஏ-அசை.

அப்பூதியடிகளுயனுர்

தனமா வதுதிரு நாவுக் கரசின் சரணமென்னு
மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத் தாங்கவன் வண்டமிழ்க்கே
யினமாத் தனது பெயரிடப் பெற்றவ னெங்கள்பிரா
னனமார் வயற்றிங்க ளூரினில் வேதிய னப்பூதியே. 29

(இ-ள்): எமக்குச் செல்வமாவது ஆண்டவரசின் திருவடிகளே என்று; கண்டார் மனதுக்கு நிறைவமைந்த தண்ணீர் பந்தரைத் துதித்து வைத்து; அத்திருநாவுக்கரசின் திருப்பதிகத்திற்கு உறுப்பாக; தன் திருப்பெயரை வைத்துப் பாடப் பெற்றவர் யாரெனில்; எங்கள் பிரானுகிய; அன்னங்கள் சஞ்சரிக்கும் வயல்களுடைய திங்களூரில் அவதரித்த; மறையவருமாகிய அப்பூதியடிகள் (எ-று) ஏ-இரண்டும் அசை.

குன்றக்குடி
அருள்மிகு ஆறுமுகப்பெருமான்
பாமாலை

மரு. பரமகுரு

மரகத வெற்பில் பவளப் பொருப்பு வளர்ந்தழகுக்
கரங்களீ ராறு கவின்கிளை நீட்டிக் கதிர் வடிவேல்
ஒருகரம் தாங்கி ஒழுகும் அமுத கிரணமதி
அறுமுக மாகி இக் குன்றக் குடியில் அமர்ந்ததுவே. (30)

வெற்றிவேல் வீரவேல் சக்திவேல் ஞானவேல் வேண்டி நின்றார்க்(கு)
உற்ற அருள்வேல் வடிவேல் எழில்வேல் ஒளி நெடுவேல்
கொற்ற வேல் குன்றக் குடிவேல் அறுமுகக் கோன் திருக்கை
பற்றும் வேல் உண்டு பணிவாய் மனமே பயமிலையே. (31)

குன்றக் குடிமலை ஆறு முகத்தனைக் கும்பிடுவார்
என்றும் இளமையும் நோ யொன் றிலாத எழிலுடம்பும்
குன்றாத செல்வமும் கல்வியும் பெற்றுக் குலவியின்பம்
நன்றே யுறுவது திண்ணம் கண் கண்டது நம்புமினே. (32)

பொன் தரும் போகம் தரும்புக ழும்தரும் பொற்புமனை
முன் தரும் நன் மக்கட் பேறும் தரும் நேர் முயற்சி தரும்
நன் பொரு ளும் தரும் குன்றக் குடிமலை நாயகனும்
மின் தரும் வள்ளிக் கொடிபடர் மாணிக்க வெற்பதுவே. (33)

நாளுக்கும் கோளுக்கும் ஊழுக்கும் அஞ்சி நடு நடுங்கிச்
சூளையில் வைத்த துரும்பா யெரியும் துயர் மனமே
காளையில் ஏறியோன் மைந்தன் குன் றக்குடிக் கந்தனெழில்
தாளையும் வேலையும் நம்பினர்க் கேதும் தடையிலையே. (34)

பணத்திற் புரண்டு பதவியி லேறிப் பலவகையாம்
கணத்திற் கலந்து களித்துத் திரிவார் கடைசியிலே
பிணக்கும் பலிலோர் பிணமேகுன் றக்குடிப் பெட்டகத்தை
மணக்க வாய் வாழ்த்துவார் என்றுமே வாழ்வராம் வாய்மையிதே. (35)

கொக்கரித் தண்டம் குலுங்கப் பகைவாய் குருதி வெள்ளம்
கக்க வைக்கும் சேவற் கொடியுடை யாய் குன்றைக் காவலனே
தக்கத் தகிங்கிடத் தித்தோ மெனமயில் சந்த நடம்
எக்களித் தாட எழுந்தருள் வேலவா இக்கணமே. (36)

குமரா நினதருள் வாரி படிந்தெழு கொண்டலென
அமுதத் திருப்புகழ்த் தேன்மழை பெய்த அருணகிரி
தமிழைப் பருகிய சண்முகா நின்னடித் தாமரைக்கே
அமையாப் புலைச்சிறு நாயேனும் பாடல் அழகிலையே. (37)

திருமுரு காற்றுப் படை செய்நக் கீரர், திருப்புகழ்த்தேன்
அருவி பொழிந்த அருண கிரி, சொல் அழகொழுக
உருகிக் கொழித்த குருபரர் பாடிய ஒண்ட மிழைப்
பருகிய அண்ணல் என் பாட்டிற்கும் நல்லருள் பாலிப்பனே. (38)

தூய மனத்தினர் நின்புக ழைத் தமிழ்ச் சொல்லெடுத்து
வாயும் மனமும் மணக்கப் பரவினர் வாய்மையிலாப்
பேயனேன் பாடும் பிழை பொறுப் பாய் ஒரு பெற்றியிலேன்
தாயான சண்முகா குன்றக் குடிமலைத் தண்ணளியே. (39)

கந்தா கடம்பா முருகா அறுமுகா கார்த்திகேயா
எந்தையே ஈசா மயில்வாக னுருகா என்று நித்தம்
வந்தித் தழைக்கும் வரமருள் ஐயா மணித் தமிழால்
நிந்திப் பவரையும் வாழ்விக்கும் தெய்வமே நீ துணையே. (40)

சிகரங்க ளாறு திகழும் பவளச் செழுமலை போல்
முகமாறு கொண்ட முழுமணி யேநலம் மொய்த்திருக்கும்
அகமுடை யார்க்கிங் கருளா ரமுதே அணுவளவும்
தகவிலேன் ஆயினும் தாங்குதல் நின்கடன் சண்முகனே. (41)

சரவணப் பொய்கையில் ஆறு திருமேனி தாங்கியருள்
பெருகக் கிடந்து தவழ்ந்த பெருமான் பிறங்கு புகழ்
உருகி மனங்கனிந் தோதுவார்க் கில்லை ஒரு துயரும்
அரச வனத்துறை ஆறு முகன்ருள் அடைக்கலமே. (42)

வேலும் மயிலும் துணை நம் தலையின் விதியழிக்கும்
காலும் துணைநமக் கேநோ மனமே கவலை, கந்த
மூலப் பொருள் வாழ் முதற் பொருள் ஞான முழுப் பொருளே
காலத்தை வென்றுகுன் றக்குடி நின்றது கண் எதிரே. (43)


மயிலிருப் பான்நம் மயலறுப் பான்நம்பி வந்தவர் தம்
துயரறுப் பான்தீமை சுட்டறுப் பான்இன்பம் தோற்றுவிப்பான்
புயனிறத் தண்ணல்எம் மாயவன் ஆலிலை பொங்குகடல்
துயிலிருப் பான்மரு கன்சுடர் வேலன் தொழு மனமே. (44)

எண்ண இனிக்கும் எலும்புள் இனிக்கும் எழில் நிறைவால்
கண்ணும் இனிக்கும் கருத்தும் இனிக்கும் கவிப் புலவர்
வண்ணத் தமிழ் மழை யால் வளர்ந் தோங்கி மயில்மலை மேல்
கண்பன்னி ரண்டொடு நின்றதோர் ஞானக் கரும்பதுவே. (45)

(தொடரும்)



நாகர்கோயில் பேரவை மாநில மாநாட்டில்
தவத்திரு. அடிகளார் அவர்களும்
அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்களும்



பேரவை மாநில மாநாட்டில் மாண்புமிகு ம. பொ. சிவஞானம்
அவர்கள் உரையாற்றுகிறார்கள்.

உ

திருச்சிற்றம்பலம்

திருவருட்பா

(சற்குருமணி மாலை)

கற்கரை யும்படி கரைவிக்குங் கருத்தே
    கண்மணி யேமணி கலந்தகண் ஒளியே
சொற்கரை யின்றிய ஒளியினுள் ஒளியே
    துரியமுங் கடந்திட்ட பெரியசெம் பொருளே
சிற்கரை திரையறு திருவருட் கடலே
    தெள்ளமு தேகனி யேசெழும் பாகே
சர்க்கரை யேஅது சார்ந்தசெந் தேனே
    தனிநட ராசஎன் சற்குரு மணியே

—திருவருட்பிரகாச வள்ளலார்

திருச்சிற்றம்பலம்

Edited, Printed at Peravai Achakam and Published by A. Narayanaswamy. B. A., for the Tamil Nadu Deivika Peravai at No. 9, Maharaja Surya Rao Road, Alwarpet, Madras-600018